உ
விநாயகர் துணை



# அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## கேர்ணிங்,டென்மார்க்

## பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**05-12-2024*(குருவாரம்)* வியாழக்கிழமை நண்பகல் 12.00மணி**

நேரிசை வெண்பா
சீர்மேவு டென்மார்க்கில் செப்புகின்ற கேர்ணிங்கில்
பேர்சித்திப் பிள்ளையார் பேரருளால் ---நேர்கொண்ட
கோவில் திருப்பணி கூடிவர நம்மடியார்
மேவிநிற்க நல்லருளா மே.

மெய்யடியார்களே !

டென்மார்க் நாட்டில் பல்லாண்டு காலமாகத் திருவருள் புரிந்து வரும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபனவைபவம் மங்கள குரோதி வருடம் தமிழுக்கு கார்த்திகை மாதம் 20ம் நாள் ஆங்கிலத் திகதி 05-12-2024(குருவாரம் ) வியாழக்கிழமை வளர்பிறை பஞ்சமித் திதியும் உத்தராட நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் 11.15மணி முதல் 12.20 மணிக்குள் கூடியுள்ள மகர லக்ன சுபவேளையில் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.அனைத்து அடியார்களும் சந்நிதி வந்து விநாயகப் பெருமானின் திருப்பணிகள் விரைவில் நிறைவேறி மஹாகும்பாபிஷேகம் காண்பதற்கான பேரருளை வேண்டி நிற்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**கிரியாகால நிகழ்வுகள்.**

04-12-24 புதன்கிழமை காலை 9.00 மணி விநாயகர் வழிபாடு ,அனுக்ஞை கணபதி ஹோமம்,நவக்கிரக ஹோமம் ,பாலாலய வாஸ்து சாந்தி

மாலை.5.00மணி விநாயகர் வழிபாடு பிரசன்ன அபிஷேகம் ,கும்பஸ்தாபனம்,கலாகர்ஷனம்,க்ஷண ஹோமம் ,கும்பம் யாக சாலாப் பிரவேசம்.,பாலாலய தீபஸ்தாபனம்,பேரசலனம்,யாகபூஜை மூலமந்திர ஹோமம் பூர்ணாகுதி வேத ஸ்தோத்திர நாத,கீத திருமுறை பாராயணங்கள் .

05-12-24வியாழக்கிழமை காலை 8.30 விநாயக வழிபாடு யாகபூஜை திரவ்யஹோமம்,ஸ்பர்சாகுதி, மஹா பூர்ணாகுதி ,உபசார பூஜை ,வேத,நாத,கீத,ஸ்தோத்திர , ,திருமுறை சமர்ப்பணம்.

நண்பகல் 12.00மணிக்கு பாலாலய கும்பாபிஷேகம்

தொடர்ந்து மங்கள தர்சனம் தீபாராதனை ,ஆன்மீக உரை, திருவருட்பிரசாதம்

**மங்கள வைபவகுரு**

**சைவப்புலவர்,சைவசித்தாந்த பண்டிதர்,கவிஞர்,சிவஸ்ரீ பால.வசந்தக்குருக்கள் B.A(hons)**
**லண்டன் கற்பகபதி கற்பகவிநாயகர் கோவில்.**
**சர்வ சாதகம் ஆகமப் பிரவீன சிவஸ்ரீ மஹா .உமாபிரசாத் குருக்கள்**
**உப சாதகம் ஆகமஜோதி சிவஸ்ரீ சோம பிரணவக் குருக்கள்**
**ஆலயக்குருமார்கள்** சிவஸ்ரீ ம.கணேசக்குருக்கள், சிவஸ்ரீ இறையருள் இரத்தின ஜெயமுரளிக்குருக்கள்.
சிவாகம கலாநிதி சிவபிரம்மஸ்ரீ நாராயண சபாரத்தின குருக்கள்
ஆலய உதவி அர்ச்சகர்: பிரம்மஸ்ரீ இரத்தின ஜெய கீதையசர்மா

இங்ஙனம்
பரிபாலனசபையினர்

ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் www.pillayar.dk தொடர்புகளுக்கு 97225511,29253851